பக்கங்கள். எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்10 வள்ளுவர் ஆண்டு 2026 புரட்டாதி 15 திங்கட்கிழமை (02-10-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 312

# அச்சுவேலி-நிலாவரை பகுதிகளுக்கு முன்னேற படையினர் கடும் முயற்சி

## தடுத்து புலிகள் உக்கிரச் சமர்

யாழ்ப்பாணம். ஒக்ரோபர் 2

பலாலி படை முகாம் இராணுவத்தினர் ஷெல் மழை பொழிந்தவாறு கனரக வாகனங்கள் சகிதம் பெருத்த எடுப்பில் தென் கிழக்குப் பக்கமாக அச்சுவேலி, பத்தமேனி, நிலாவரைப் பகுதிகளை நோக்கி முன்னேற முயன்று வருவதாகவும் —

அவர்களைத் தடுத்து நிறுத்தி, முன்னேற விடாது தமிழீழ விடுதலைப் புலிகள் உக்கிரச் சமர் புரிந்து வருவதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

மக்கள் செறிந்து வாழும் குடியிருப்புப் பகுதிகளை நோக்கி நேற்று அதிகாலை முதல் அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தியவாறு இராணுவத்தினர் முன்னேற்ற முயற்சியை மேற்கொண்டிருந்தனர்.

கவச வாகனங்கள், டாங்கிகள் சகிதம் ஆயிரக்கணக்கான துருப்புக்கள் இம் முயற்சியில

(7 ஆம் பக்கம் பார்க்க)

## படையினரின் நேற்றைய நடவடிக்கை முடிவுற்றதாம்!

பலாலி இராணுவ முகாமின் தென் கிழக்குப் பகுதிக்குச் சற்று அப்பால் நேற்று மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை முடிவடைந்து விட்டதாக கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## பருத்தித்துறை துறைமுக வலயத்தில் ஷெல் வீழ்ந்தது

யாழ்ப்பாணம், ஒக். 2

பருத்தித்துறை துறைமுக பாதுகாப்பு வலயப் பகுதிக் கடலில் நேற்றுக் காலை பத்து மணியளவில் ஷெல் ஒன்று வீழ்ந்து வெடித்தது.

பலாலியில் இருந்து ஏவப்பட்ட ஷெல்லே இன்பருட்டி கடற்கரையோரத்தை அண்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# படையினரின் ஷெல் தாக்குதலில் வலி. கிழக்கில் 5 அப்பாவிகள் சாவு!

## 45 பேர் படுகாயம்

யாழ்ப்பாணம், ஒக்டோபர் 2

வலிகாமம் கிழக்குப் பகுதி மீது ஸ்ரீலங்காப் படையினர் நேற்று நடத்திய கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களில் அப்பாவிப் பொதுமக்கள் ஐந்து பேர் பலியாகினர்; சிறுவர் வயோதிபர் உட்பட நாற்பத்தியைந்து பேர் வரை காயமுற்றனர். பெருமளவு சொத்துகள் நாசமாகின.

பலாலி முகாம் படையினர் நேற்று அதிகாலை முதல் புன்னாலைக்கட்டுவன், ஈவினை, நவக்கிரி, நிலாவரை அச்செழு, அச்சுவேலி, மாசுவன், பத்தமேனி, ஆவரங்கால், சிறுப்பிட்டி, புத்தூர், நீர்வேலிப் பகுதிகளை நோக்கி கண்மூடித்தனமாக — அகோர ஷெல் தாக்குதல்களை நடத்தினர்.

பெருத்த சத்தத்துடன் அடுத்தடுத்து விழுந்து வெடித்த இந்த ஷெல்களின் அதிர்வு யாழ் குடாநாடு முழுவதும் கேட்டது. இதனால் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் வழமைநிலை பாதிக்கப்பட்டது.

மக்கள் குடியிருப்புகள் மீது பல நூற்றுக்கணக்கில் ஷெல்கள் விழுந்து வெடித்த பொழுதிலும் —

ஷெல்கள் விழுந்த பல பகுதிகளில் இருந்து மக்கள் முன்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## வல்லைவெளி ஊடான போக்குவரத்து பாதிப்பு

படையினரின் கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களினால் வல்லைவெளி ஊடான போக்குவரத்து நேற்று பெரும்பாலும் தடைப்பட்டிருந்தது.

வடமராட்சிக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான போக்குவரத்து தென்மராட்சி ஊடாகவே நடைபெற்றது.

சிற்றூர்திகள் வல்லைவெளியைத் தவிர்த்து கப்பூது வெளியூடாக போக்குவரத்தில் ஈடுபட்டன.

படையினர் ஏவிய ஷெல்கள் வல்லைப் பகுதியிலும் உடுப்பிட்டி, இமையாணன் பகுதிகளிலும் விழுந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

[உ-15-173-தி]

## கோப்பாய், புத்தூர், நீர்வேலியில் நேற்றிரவு 21பேர் ஷெல்லினால் காயம்

யாழ்ப்பாணம், ஒக். 2

நீர்வேலி, கோப்பாய், புத்தூர் பகுதிகளில் நேற்று மாலை 6 மணிக்குப் பின்னர் வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் 21 பேர் காயமுற்றனர்.

அவர்களில் ஒருவரைத் தவிர ஏனையோர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று இரவு இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களினால் பல வீடுகள் சேதமடைந்தன.

நேற்று மாலை 6.30 மணியளவில் நீர்வேலி செம்பாடு அரசகேசரி பிள்ளையார் கோவில் பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட எட்டுப் பேர் காயமுற்றனர். அவர்களின் விவரம் வருமாறு:-

★ தங்கராசா கவீந்திரதாஸ் (வயது 48)

★ அவரின் மனைவி கவீந்திரதாஸ் மாலினி (வயது 45)

[7 ஆம் பக்கம் பார்க்க]

## 50 ஆயிரம் மக்கள் இடம்பெயர்வு தென்மராட்சியில் அகதிமுகாம்கள்

யாழ்ப்பாணம், ஒக். 2

வலி. கிழக்குப் பகுதியில் நேற்று படையினர் மேற்கொண்ட அகோர ஷெல் தாக்குதலால் சுமார் 50 ஆயிரம் பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளதாக யாழ். செயலகத்தின் பூர்வாங்க மதிப்பீடுகள் தெரிவித்தன.

யாழ் செயலக புனர்வாழ்வுப் பிரிவு அதிகாரிகள் நேற்று அந்தப் பகுதிக்கு நேரில் சென்று இடம்பெயர்ந்த மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்தனர்.

ஆவரங்கால், சிறுப்பிட்டி, புத்தூர், நீர்வேலிப் பகுதிகளில் இருந்து சுமார் 10 ஆயி [illegible] 50 ஆயிரம் மக்கள் இடம்பெயர்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கூடுதலான மக்கள் கப்பூது ஊடாக தென்மராட்சிக்கு சென்றுள்ளதாகவும் —

அவர்கள் தங்குவதற்காக மட்டுவில் மகா வித்தியாலயம்

[8 ஆம் பக்கம் பார்க்க]

## உயிரிழந்தோர் விவரம்

நேற்று வலிகாமம் கிழக்குப் பகுதி மீது படையினர் நடத்திய அகோர ஷெல் தாக்குதலில் உயிரிழந்தோர் விவரம் வருமாறு:—

★ கணபதி சுப்பிரமணியம் (வயது 55)— பத்தமேனி பாரதி வீதியில் இருந்து இடம்பெயர்ந்த இவர் சிறுப்பிட்டி மேற்கு அகதிமுகாமில் தங்கியிருந்தார். நேற்று ஷெல் தாக்குதலுக்கு அஞ்சி அகதி முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட சமயம் வீதியோரத்தில் வீழ்ந்த ஷெல்லினால் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

★ கணபதி மயில்வாகனம் (வயது 55)— ஆவரங்காலைச் சேர்ந்தவர். யாழ் ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்ட பின்னர் அங்கு மரணமானார்.

ஷெல் தாக்குதல் சம்பவத்தில் இவருடன் படுகாயமுற்ற இவ

(8 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு யுத்தசெலவு
# மேலும் 25 வீதம் அதிகம்

கொழும்பு, ஒக். 2

அடுத்த ஆண்டுக்கான— 1996 ஆம் வருடத்துக்கான— பாதுகாப்புச் செலவு, இந்த ஆண்டை விட 25 சதவீதம் அதிகமாக இருக்கும். அதாவது போருக்கான செலவு அடுத்த ஆண்டில் 3,390 கோடி ரூபாவாக இருக்கும் என்று மதிப்பீடுசெய்துள்ளது.

பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றில் ஏ. எவ். பி. செய்தியாளரும் பிரபல பத்திரிகையாளருமான அமல் ஜயசிங்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"1996 இல் பொருளாதார நிலைமை" என்ற தலைப்பில் கொள்கை வகுக்கும் நிறுவனம் ஒன்று வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றை மேற்கோள் காட்டியே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

★ நீடித்துவரும் போருக்குரிய செலவுக்காக வரிகளை அதிகரித்தாலும் வரவு - செலவுத்திட்ட பற்றாக்குறையை நிரப்புவது கடினமாகும்.

★ வேறு காரணங்களை தவிர போரின் காரணமாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்யத் தயங்குகிறார்கள்.

★ போர்ச் செலவு அதிகரிப்பு, வேலைநிறுத்தங்கள், அரச திணைக்களங்களின் செயல் திறமையின்மை போன்ற காரணங்களால் பொருளாதார வீழ்ச்சி ஏற்படும்.

★ போர் மேலும் விரிவடைய விரிவடைய வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவதைத் தவிர்த்து வேறு தேசங்களை நாடுவர்.

★ பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசு பதவியேற்ற பின்னர் வெளிநாட்டு முதலீடுகள் ஊக்குவிக்கப்படாததால், வேலை வாய்ப்பும் தோற்றுவிக்கப்படவில்லை.

[அ-3-6]

### 10 கோரிக்கைகளை முன்வைத்து

## தொழிற்சங்க நடவடிக்கை; அரச டாக்டர்கள் முஸ்தீபு

கொழும்பு, ஒக். 2

வடக்கு - கிழக்கு பகுதிகளில் கட்டாயம் கடமையாற்ற வேண்டும் என்று வலியுறுத்தும் அரசின் முடிவை கைவிட வேண்டும் என்ற கோரிக்கை உட்பட 10 கோரிக்கைகளை முன்வைத்து அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்க முஸ்தீபு செய்து வருகின்றது.

மருத்துவ பட்டதாரிகள் (டாக்டர்கள்) சங்கத்தின், விசேட கூட்டம் ஒன்று நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற சமயம் இக்கோரிக்கைகள் குறித்து ஆராயப்பட்டன.

இக்கோரிக்கைகள் குறித்து அரசு ஒருவார காலத்தில் பதில் அளிக்காது விட்டால் தொழிற் சங்க நடவடிக்கையில் இறங்குவது என முடிவு செய்யப்பட்டதாக சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

(இது சம்பந்தமான மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

[உ-3]

### கிராம சேவையாளர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 2

யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் ஜே. 61 தொடக்கம் ஜே 88 வரையான இலக்கங்களையுடைய கிராம சேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த கிராம சேவையாளர்களை இதில் தவறாது கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகளின் யாழ். வட்டத்தினர் கேட்டுள்ளனர்.

(உ-3)

### வெறிச்சோடியது

நேற்று இடம்பெற்ற கண்மூடித்தனமான ஷெல் தாக்குதல்களால் வலிகாமம் கிழக்கு பகுதி முழுவதுமே செயலிழந்து பீதியுடனும், பரபரப்புடனும் காணப்பட்டது.

நேற்றிரவு 6 மணிக்குப்பின் நீர்வேலி முதல் புத்தூர் வரையான பகுதிகளுக்குள் நுழைந்தபோது அப்பிரதேசம் மனித நடமாட்டமே அற்ற, மயான அமைதியில் வெறிச்சோடிக் காணப்பட்டது. ஆங்காங்கே ஷெல்கள் விழுந்து வெடித்தவாறு இருந்தன.

## விளையாட்டு நிகழ்வுகள்

கரப்பந்தாட்ட விளையாட்டின் நூறாவது ஆண்டு நிறைவையும் "உதயன்" வெளியீட்டகத்தின் பத்தாவது ஆண்டு நிறைவையும் ஒட்டி யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் "உதயன்" நிறுவனத்தின் ஆதரவுடன் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மைதானத்தில் உள்ள ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 4 00 மணி:- பாரதி வி.க. அணி எதிர் கோப்பாய் வாலிபர் வி.க. அணி.

★ 5 00 மணி:- அரியாலை ஐ வி.க. அணி எதிர் ஐங்கரன் வி.க. அணி.

[உ]

★ ★ ★

கல்வி வலயம் — 2 இற்கு உட்பட்ட பாடசாலை அணிகளுக்கு இடையில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று பிற்பகல் மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 2 15 மணி (15 வயதுப் பிரிவு) அருணோதயாக் கல்லூரி அணி எதிர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி அணி.

★ 3 15 மணி:-[19 வயதுப் பிரிவு) மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி எதிர் யூனியன் கல்லூரி அணி.

★ 4.15 மணி:-(19 வயதுப் பிரிவு) சென். ஹென்றீஸ் கல்லூரி அணி எதிர் மகாஜனக் கல்லூரி அணி.

[உ-20]

★ ★ ★

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையில் இணுவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுவரும் உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3 00 மணி:- [15வயதுப் பிரிவு] இணுவில் இந்துக் கல்லூரி அணி எதிர் இணுவில் மத்திய கல்லூரி அணி.

★ 3 45 மணி:- [17வயதுப் பிரிவு] இணுவில் மத்திய கல்லூரி அணி எதிர் இணுவில் இந்துக் கல்லூரி அணி.

★ 4 45 மணி:- [19வயதுப் பிரிவு] ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி எதிர் இணுவில் மத்திய கல்லூரி அணி.

[உ-20]

★ ★ ★

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் 15, 17, 19 வயது அணிகளுக்கு இடையிலான சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணி முதல் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

[உ-20]

# வடக்கு - கிழக்கு பிரச்சினைக்கு ராணுவ முயற்சி தற்காலிகமானதே

## அமைச்சர் ரத்வத்த சொல்கிறார்

கொழும்பு, ஒக் 2

இராணுவ முயற்சிகள் வடக்கு - கிழக்கு நெருக்கடிக்கு தீர்வு காண கடைப்பிடிக்கப்படும் ஓர் தற்காலிக நடவடிக்கையே; அரசியல் தீர்வு தவிர்க்க முடியாதது — இவ்வாறு பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

மல்வத்த பீடாதிபதி கையளித்த தேசிய பாதுகாப்பு நிதியைப் பெற்றுக்கொண்டு அது சம்பந்தமான வைபவத்தில் உரையாற்றுகையில் அமைச்சர் ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கம் நல்ல விளக்கத்துடன் இந்தக் கடமையை நிறைவேற்றவும், சமாதானத்தை நிலைநாட்டவும் தயாராக இருக்கின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசு சமாதானத்தை எதிர்க்கும் சக்திகளை இராணுவ ரீதியில் தோல்வியுறச் செய்யவும், நாட்டின் பெரும்பான்மை மக்களின் மத்தியில் அரசியல் கருத்தொற்றுமையை ஏற்படுத்தவும் ஓர் உறுதியான திட்டத்தின்கீழ் பிரச்சினைக்கு தீர்வு காணவும் நடவடிக்கை எடுத்துவருகின்றது.

### நாட்டைப் பிரிக்க அனுமதியோம்

எனவே உண்மைகளைத் திரித்துக் கூறுகின்றவர்களால் மக்களை தவறாக வழிநடத்திச் செல்லமுடியாது.

இந்த அரசாங்கம் நாட்டைப் பிரிப்பதற்கு எவரையும் அனுமதிக்கப் போவதில்லை. அத்தகைய எந்த நடவடிக்கைக்கும் அரசாங்கம் பங்காளியாக இருக்கப் போவதும் இல்லை.

அரசு இந்தப் பிரச்சினைகளை தெளிவாகப் புரிந்துகொண்டு உறுதியான முறையில் இன்று செயற்படுகின்றது.

எனவே பிரிவினை ஏற்படும் என்று கருதுவதற்கு இடமேயில்லை— என்றார்.

அரசாங்கம் எந்தச் செயலையும் இரகசியமாகவோ, [illegible] என்றும் அனுருத்த குறிப்பிட்டார்.

மகாநாயக்க தேரர் ஆற்றிய

[இந்நிகழ்வில் மல்வத்தை உரை 7 ஆம் பக்கத்தில்]

# விஜயதசமியும் வித்தியாரம்பமும்

இவ்வாண்டு புரட்டாதி நவராத்திரியின் விஜயதசமி செவ்வாய்க்கிழமையில் வருகிறது. செவ்வாய்க்கிழமையில் வித்யாரம்பமோ புதிய கர்மங்களோ செய்யலாமா எனப்பலர் ஐயுறுகிறார்கள்.

சாந்திரமானரீதியான ஆசுவின மாதத்தில் சுக்லபக்ஷப் பிரதமை தொடக்கம் தசமி வரையிலான நாள்கள் தேவியை உபாசிக்க வேண்டிய நாள்களாகும். இந்த நாள்களையே நவராத்திரி விஜயதசமி எனக் கூறுகிறோம். இந் நாள்களில் கிழமையோ, நட்சத்திரமோ முக்கியமாக எடுக்கப்படுவதில்லை. "திதியே" முக்கியமாக கொள்ளப்படுகிறது.

மேலும் நவமி, தசமி நாள்களில் செவ்வாய்க்கிழமை என்ற குற்றம் கிடையாது. விருட்சத்தடியில் அர்ச்சுனன் ஆயுதங்களை தசமியில் பூசை செய்து எடுத்தநாள் விஜயதசமியாம். (விஜயன் என்பது அர்ச்சுனன் பெயர்) மேலும் விஜயம் என்பது பெருவெற்றி, வெற்றியை நோக்கிச் செல்லுதல் எனவும் பொருள்படும்.

மேலும் அன்றைய தினமே கௌரிவிரதம் ஆரம்பிக்கும் மங்கள நாள். எந்தக் குற்றத்தையும் நீக்கி வெற்றிதரும் நாள் விஜயதசமி. எனவே சகல கர்மாரம்பங்களும் அன்று செய்யலாம் என்பதை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**அருள்ஜோதி ஸ்கந்த சாம்பசிவாச்சார்யார்**
இலங்கை இந்துமத குருபீடாதிபதி

★ ★ ★ ★ ★

செவ்வாய்க்கிழமை விஜயதசமி வருவதால் அன்று ஏடு தொடக்கலாமா என்று உதயன் 24 - 09 - 1995 ஆம் திகதி இதழில் திரு பேரின்பநாயகம் மயூரன் ஒரு கேள்வி எழுப்பியிருந்தார்.

விஜயதசமி எப்போதும் சுப நாளில் தான் வருமென்று சொல்ல முடியாது. சில சந்தர்ப்பங்களில் அன்று காலை நவமி வியாபித்திருக்கும். மரண யோகம் (தவிர்க்கப் படவேண்டிய யோகம்) அன்று அமையக்கூடும். ஆகையால் அன்று புதிதாக அக்ஷராரம்பம், வித்தியாரம்பம் செய்வது நன்றல்ல.

பஞ்சாங்கங்களில் அக்ஷராரம்பம் வித்தியாரம்பம் செய்வதற்கு சுப முகூர்த்தங்கள் குறிக்கப்பட்டுள்ளன. அதில் மாசி தவிர்ந்த உத்தராயணம் தான் சொல்லப்படுகிறது. அதாவது சித்திரை, வைகாசி, ஆனி, தை, பங்குனி மாதங்களே குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தக் குறிக்கப்பட்டுள்ள முகூர்த்தங்களே உத்தமமானவை.

விஜயதசமிக்கு முதல்நாள் மஹாநவமி, சரஸ்வதிபூஜை, ஆயுதபூசை என்று சொல்லப்படுகிறது. அன்று நாம் கல்வி கற்கின்ற புத்தகங்கள், பாவிக்கின்ற ஆயுதங்கள், வாகனங்கள், இசைக் கருவிகள் போன்றவற்றை எல்லாம் சரஸ்வதி தேவியாகப் பாவித்து பூசை செய்து, மறுநாளாகிய விஜயதசமியன்று உபயோகிக்கின்றோம். ஆகவே நாம் நாளாந்தம் பாவிக்கின்றவற்றை பூசித்து அவற்றைப் புதுப்பிக்கின்ற ஒரு நாளாகக் கருதலாமேயன்றி புதிதாக அக்ஷராரம்பம், வித்தியாரம்பம் செய்வதற்கு உகந்ததல்ல.

**சி. சிதம்பரநாதக் குருக்கள்**
(திருக்கணித பஞ்சாங்க ஆசிரியர்)


## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் பொன்னுத்துரை

வேலணை மேற்கை வதிவிடமாகவும், சரவணை மேற்கை பிறப்பிடமாகவும், கொண்டு தற்போது திருநெல்வேலியில் வசித்தவரான பிரபல வர்த்தகர் பொன்னம்பலம் பொன்னுத்துரை (தெனியாய ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ்) அவர்கள் நேற்று அதிகாலை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற பொன்னம்பலம் — சிவகாமிப் பிள்ளை தம்பதிகளின் அன்புமகனும், நல்லதம்பி — செல்லமுத்து தம்பதிகளின் மருமகனும், நாகபிள்ளையின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற நாகேஸ்வரி, மற்றும் நாகேந்திரா, தெய்வேந்திரா ஆகியோரின் அன்புத்தந்தையும், மனோசிவ நாதனின் மாமனாரும், யோகம்மா, செல்லம்மா, இராசம்மா, ஏகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், பிரியலக்ஷ்னா, அனுஸ்பிரியா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று [1-10-95] அவரது இல்லத்தில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
நாகேந்திரா
(மகன்)

வளாகவீதி,
திருநெல்வேலி தெற்கு,
யாழ்ப்பாணம்.

[38801]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய சட்டம் வருகிறது

# சட்டவிரோதமாக இலங்கையர்களை வெளிநாடு கூட்டிச் செல்ல தடை

கொழும்பு, ஒக். 2

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக ஆட்கள் வெளிநாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதைத் தடுக்கும் வகையில் புதிய சட்டம் ஒன்றை உருவாக்க அரசு ஆலோசித்து வருகிறது.

ஆட்கள் சட்ட விரோதமான முறையில் வேறு நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்படுவதைத் தடுப்பதற்கான ஐக்கிய நாடுகள் தீர்மானம் ஒன்று அண்மையில் ஏற்றுக் கொள்ளப்பட்டதை அடுத்து அரசு இது பற்றி கவனம் செலுத்துவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஜூலை மாதம் "டிரக்" இழுவை வண்டி ஒன்றினுள் அடைத்து ஜேர்மனிக்கு கொண்டு செல்லப்பட்ட போது ஹங்கேரியில் மூச்சுத் திணறி 19 இலங்கைப் பிரஜைகள் உயிரிழந்தனர்.

இதே காலப்பகுதியில் "டிரக்" வண்டி ஒன்றினுள் சென்று கொண்டிருந்த மற்றொரு தொகுதி இலங்கையர்கள் ஹங்கேரியில் கண்டு பிடிக்கப்பட்டிருந்தனர்.

இவ்விரு சம்பவங்களும் உலகின் கவனத்தை ஈர்த்தன. இந்த நிலைமையை பயன்படுத்தி புதிய சட்டம் ஒன்றை கொண்டுவர அரசு முயற்சித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது. [ஐ-எ]

## மாணவர் அறிவியல் கழக இவ்வார வகுப்புகள்

மாணவர் அறிவியல் கழக அங்கத்தவர்களுக்கான வாராந்த வகுப்புகள் இந்த வாரமும் நடைபெறவுள்ளன. அவற்றின் விவரம் வருமாறு;

*திங்கள்*

★ பி. ப. 3.00 மணியிலிருந்து 4.30 மணிவரை ஆண்டு 9—கணித செயன்முறை வகுப்பு

★ பி. ப. 3.30 மணியிருந்து 5.00 மணிவரை ஆண்டு 10—விஞ்ஞான செயன்முறை வகுப்பு

★ பி. ப. 5.00 மணியிலிருந்து 6.00 மணிவரை ஆங்கில வகுப்பு

*செவ்வாய்*

★ மு. ப. 9.30 மணியிலிருந்து 8.00 மணிவரை யா/இளவாலை ஹென்றியரசர் கல்லூரி விஞ்ஞான செயன் முறை வகுப்பு

★ பி. ப. 3.00 மணியிலிருந்து 4 00 மணிவரை ஆண்டு 9 — விஞ்ஞான செயன்முறை வகுப்பு

★ பி. ப. 4.00 மணியிலிருந்து 5.30 மணிவரை ஆண்டு 7—கணிதசெயன்முறைவகுப்பு

*புதன்*

★ பி. ப. 3.00 மணியிலிருந்து 4.30 மணிவரை "அறிவியல் ஒளிப்படக் காட்சி"

★ பி. ப. 4.30 மணியிலிருந்து 5.30 மணிவரை உறுப்பினர்களுக்கான கலந்துரையாடல்

*வியாழன்*

★ பி. ப. 3.00 மணியிலிருந்து 4.30 மணிவரை ஆண்டு 10— கணித செயன் முறை வகுப்பு

★ பி. ப. 3.30 மணியிலிருந்து 4.30 மணிவரை ஆண்டு 8— விஞ்ஞானசெயன் முறை வகுப்பு.

பி. ப. 4.30 மணியிலிருந்து 5.30 மணிவரை ஆண்டு 8 — கணித செயன்முறை வகுப்பு

*வெள்ளி*

★ பி. ப. 3-00 மணியிலிருந்து 4-00 மணிவரை ஆண்டு 11 — கணித செயன் முறை வகுப்பு, பி. ப. 4-00 மணியிலிருந்து 5-30 மணி வரை ஆண்டு 11 — விஞ்ஞான செயன்முறை வகுப்பு.

*சனி*

★ மு. ப. 9-30 மணியிலிருந்து 11-00 மணி வரை ஆண்டு 9 — கணித செயன் முறை வகுப்பு.

★ மு. ப. 11-00 மணியிலிருந்து 12-00 மணி வரை ஆண்டு 7 — கணித செயன் முறை வகுப்பு

★ பி. ப. 4-00 மணியிலிருந்து 5-30 மணி வரை ஆண்டு9 — விஞ்ஞானசெயன் முறை வகுப்பு. (எ)

## ஆலயங்களில்

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ வல்லிபுரநாதர் (நாராயணன்) கோவில் சப்பறத் திருவிழா இன்று திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. நாளை முற்பகல் 10 மணிக்கு தேர்த் திருவிழாவும் நாளை மறுதினம் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ)

## வாணி விழா

யாழ்ப்பாணம், ஒக். 2

திருநெல்வேலி, சைவ வித்தியாவிருத்திச் சங்கத்தின் வாணி விழாவும், சான்றிதழ் வழங்கும் விழாவும் இன்று பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் சைவ வித்தியா விருத்திச் சங்கத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும். (எ)

## மறைவுக்கு அனுதாபம்

தென்மராட்சி ஒக். 2

ஆத்மஜோதி நா. முத்தையாவின் மறைவையொட்டி, சாவகச்சேரி டச் வீதி பழனி ஆண்டவர் பரிபாலன சபையினர் அனுதாபம் தெரிவித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். (எ)

தென்மராட்சியில்

## கிராம அலுவலர் பிரிவுகளில் விசேட முதலுதவிப் பயிற்சி

தென்மராட்சி, ஒக். 2

தென்மராட்சி பிரதேச செயலகமும் செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து தென்மராட்சிப் பிரதேசத்தில் அனைத்து கிராம அலுவலர் பிரிவிலும் அவசரகால முதலுதவிப் பயிற்சியினை வழங்கி வருகின்றன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் தலா பத்துப் பேருக்கு இப்பயிற்சி வழங்கப்படுகிறது.

இப்பயிற்சிகளை இலங்கை செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி பிரிவுச் செயலாளர் திரு. எஸ். கணேசன், கிராம அலுவலர் திரு. ம. வாமதேவன், ஆசிரியை திருமதி தர்மராசா, சாவகச்சேரி நகர பொது சுகாதார பரிசோதகர் திரு. எஸ். இளின்டன் ஆகியோர் நடத்தி வருகின்றனர். [ஐ-117]

## மாஹோ கப்பலில் வந்த அவல், கடலை விநியோகம்

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி, சந்தைப்படுத்தல் நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்கு சுமார் ஆயிரம் மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் "மாஹோ" கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளன.

நவராத்திரி காலத்துக்குத் தேவையான அவல், கடலை வகை, பயறு, உழுந்து, சர்க்கரை, சீனி மற்றும் ரவை, தேயிலை, பாமோ வகை, மாஜரின் என்பன இவற்றுள் அடங்கும். அத்துடன் ஒரு தொகுதி சவர்க்கார வகைகளும், மீன் டின்களும் எடுத்து வரப்பட்டுள்ளன.

சமாசத்தில் பொருள் கொள்வனவுக்கென முற்பணம் கட்டிய ப. நோ. கூ. சங்கங்களுக்கு இப்பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டு அவை தற்போது பொதுமக்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

இந்தப் பொருட்கள் சமாசத்தால் பின்வருமாறு விலை நிர்ணயம் செய்யப்பட்டு ப. நோ. கூ. சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

அவல் - கிலோ 45 ரூபா.
சர்க்கரை—கிலோ 45ரூபா.
பயறு — கிலோ 55 ரூபா.
கொண்டல்கடலை— கிலோ 60 ரூபா.
சித்தாமணிகடலை —கிலோ 80 ரூபா.
உழுந்தம்பருப்பு — கிலோ 75 ரூபா.
ரவை — கிலோ 45 ரூபா.
சீனி — கிலோ 40 ரூபா.

(ஐ-ஏ-4-135)

## தீக்காயங்களுடன் அனுமதிக்கப்பட்ட பெண் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 2

உடல் முழுவதும் தீக்காயங்களுடன் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இளம் பெண் ஒருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் அங்கு மரணமானார்

கொக்குவில் சீனியர் ஒழுங்கையைச் சேர்ந்த கந்தையா சரோஜாதேவி (வயது 19) என்பவரே இவ்வாறு மரணமானவர்

இவர் கடந்த செப்ரெம்பர் மாதம் 31 ஆம் திகதி தீக்காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (எ-15)

## பால்கோவா ரொபி

யாழ்ப்பாணம், ஒக். 2

வன்னிப் பெருநிலப்பரப்பில் கால்நடை வளர்ப்போரின் நன்மைகருதி அதிகமாகக் காணப்படும் பசுப்பாலை பயன்பாட்டுக்குக் கொண்டு வரும்முகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன உணவு பதனிடல் பகுதியினர் பால்கோவாரொபியை நீண்டகாலமாக உற்பத்தி செய்து வருகின்றனர்.

வட்டக்கச்சி சுரபி பதனிடல் தொழில் நிலையத்தில் வைத்து சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படும் இவ் பால்கோவா ரொபி சிறுவர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது (ஓ)

## பண்டித வகுப்புகள்

இதுவரை மானிப்பாய் மெமோறியல் கல்லூரியில் ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கத்தால் நடத்தப்பட்டு வந்த பாலபண்டித, பிரவேச பண்டித வகுப்புக்கள் இம் மாதம் தொடக்கம் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சனி, ஞாயிறு பின்னேரங்களில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரவேச பண்டிதர் வகுப்பில் புதிதாகச் சேர விரும்பும் — தகுதியுடைய மாணவர் பொறுப்பாசிரியர் சைவப்புலவர் செல்லத்துரையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## இறந்தோர் விவரம் சேகரித்தல்

வடமராட்சி, ஒக். 2

வடமராட்சிப் பகுதியில் அண்மையில் இடம் பெற்ற இராணுவ நடவடிக்கையின் போது இறந்தோரின் எண்ணிக்கையை கணக்கிடும் முயற்சி நடைபெற்று வருகின்றது.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமியும், கரவெட்டி பிரதேச செயலர் திரு. செ. சிறீனிவாசனும் இம் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்,

இடம்பெயர்ந்தவர்கள், காயமுற்றவர்களின் விபரங்களும் சேகரிக்கப்பட்டு வருகின்றன. [அ-15-173)

1989 ஆம் ஆண்டு முதல் 92 ஆம் ஆண்டு வரையான

## ஜி. சீ. ஈ. பெறுபேறுகளின் ஆய்வில் யாழ். பாடசாலைகளின் நிலை

1989 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சையில் பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகளை ஆராய்ந்து கணக்கிட்டு பாடசாலை வினையாற்றுச் சுட்டிகை பரீட்சை ஆணையாளரும், பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாயகமுமாகிய ஆதர் வெதமுல்ல வெளியிட்டுள்ளார்.

பொதுப் பரீட்சைகளில் பாடசாலைகள் பெற்ற பெறுபேறுகளைத் தரம் பிரித்து வகைப்படுத்துவதற்கு உதவும் வகையில் இந்த வினையாற்றுச் சுட்டிகள் வெளியிடப்பட்டுள்ளன.

பாடசாலையில் உள்ள ஒவ்வொரு மாணவனினதும் பெறுபேறுகள், புள்ளிகள் என்பன கணக்கில் எடுக்கப்பட்டு விரவையின் பெறுமானங்கள் வழங்கப்பட்டு— விஞ்ஞான முறையில் கணிப்பீடு செய்யப்பட்டு— வினையாற்றுச் சுட்டிகள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன.

இதன்படி, யாழ்ப்பாண மாவட்டத்தில் யாழ். இந்துக் கல்லூரி மூன்று ஆண்டுகளிலும் முதலாம் இடத்தைப் பெற்று முன்னணி வகிப்பதோடு— மூன்று ஆண்டுகளிலும் அதன் பெறுபேறுகள் உயர்ந்து சென்றிருப்பதும் அறியப்பட்டுள்ளது.

இந்த வினையாற்றுச் சுட்டிகளின் படி—

1989 இல் அகில இலங்கை மட்டத்தில் 9 ஆவது இடத்தில் இருந்த யாழ் இந்துக் கல்லூரி 1991 இல் ஐந்தாவது இடத்துக்கும் 1992 இல் நான்காவது இடத்துக்கும் முன்னேறியிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ் மாவட்டத்தில் பாடசாலைகள் பெற்ற வினையாற்றுச் சுட்டிகள் வருமாறு;-

| பாடசாலை | 1989 | 1991 | 1992 |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி | 76 | 79 | 81 |
| ஹாட்லி கல்லூரி | 76 | 76 | 74 |
| பரியோவான் கல்லூரி | 74 | 77 | 78 |
| சுண்டிக்குளி மகளிர் கல்லூரி | 70 | 73 | 71 |
| வேம்படி மகளிர் கல்லூரி | 69 | 62 | 66 |
| யாழ். இந்து மகளிர் கல்லூரி | 68 | 71 | 70 |
| யாழ்ப்பாணக் கல்லூரி | 65 | 62 | 64 |
| பரு. மெதடிஸ்த மகளிர் கல்லூரி | 63 | 69 | 64 |
| சென். ஹென்றிஸ் | 62 | 57 | 58 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 60 | 59 | 59 |
| யூனியன் கல்லூரி | 60 | 61 | 57 |
| உடுவில் மகளிர் கல்லூரி | 60 | 62 | 57 |
| கொக்குவில் இந்துக் கல்லூரி | 59 | 66 | 63 |
| யாழ் மத்திய கல்லூரி | 58 | [illegible] | 56 |
| புனித பத்திரிசியார் கல்லூரி | 58 | [illegible] | [illegible] |

கடற்புலிகளின் தாக்குதல்களால்

## மீனவர் மீதான கடற்படை அச்சுறுத்தல் குறைந்தது

அரணவாய், ஒக். 2

கடற்படைப் படகுகள் மீதான கடற்புலிகளின் தொடர்ச்சியான தாக்குதல்களை அடுத்து வடமராட்சி கடற்பரப்பில் மீனவர்கள் மீதான கடற்படை அச்சுறுத்தல் தற்போது குறைந்துள்ளது

இதனால் மீனவர்கள் பயமின்றி கடலில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.

கட்டுமரங்கள், வள்ளங்களில் கடலில் நீண்ட தூரம் சென்று அவர்கள் மீன்பிடிப்பதைக் காண முடிகிறது.

(எ-மி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

10 அடி நீளம் 8 அடி உயரமான 'L' வடிவிலான இரும்பு இராக்கை விற்பனைக்குண்டு. தொடர்பு: இல. 185, 3ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். (38781)

இரண்டு மாதத்தில் கன்று ஈனக்கூடிய தினமும் 10 போத்தல் பால் கறக்கக்கூடிய J. C. இனப்பசு விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. அம்பிகாபதி, பிப்பிலிச் சுடலைச் சந்தி, மானிப்பாய். [38780]

National Vacuum Cleaner MC 891C, Commode With Fittings, உருக்கு அலுமாரி, முதிரை அலுமாரிகள், தராசு (எவரி) பின்னக் செற்றி குறிஞ்சி மெடிக்கலுக்கு அருகில் பரமேஸ்வரா சந்தி, திருநெல்வேலி. (38789)

தேநீர் சாலைக்கு பாவித்த தளபாடங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு: இ. கலைச்செல்வன், 31, றக்கா வீதி, யாழ்ப்பாணம். (38782)

## கோழிகள் விற்பனை

நாலரை மாதங்கள் நிரம்பிய Hy-Line வெள்ளை பேடுகள் விற்பனைக்குண்டு. நல்லூர் வீடியோ சென்ரர், இல. 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [38792]

## வீடு வாடகைக்கு

நடுத்தர வயது தம்பதிகளுக்கு 6 மாத தவணைக்கு ஒரு சிறிய அனெக்ஸ் அல்லது ஒரு அறை வாடகைக்கு தேவை. திருநெல்வேலி, கல்வியங்காடுபகுதிகள் விரும்பத்தக்கது. வி. இல 854, மே/பா உதயன். (38777)

## பிரத்தியேக வகுப்புக்கள்

மீண்டும் சாவகச்சேரியில் பிரத்தியேக (Personal) வகுப்புக்கள் ஆண்டு 10, 11 மாணவர்களுக்கு கணித பாடத்திற்கு மேலதிக விபரங்களுக்கு: New Brilliant Accademy, சாவகச்சேரி. (38778)

## உச்சப் புள்ளி பெற

மூன்றாம் தவணைத் தேர்வில் தமிழ்மொழிப் பாடத்திலே உச்சப்புள்ளி பெற துணைபுரியும் ஒரே ஒரு நூல்வரிசை "தமிழ் மொழி செயல் நூல்" ஆண்டு 3 தொடக்கம் ஆண்டு 11 வரை ஸ்ரீ சுப்பிரமணிய பொத்தகசாலை, யாழ்ப்பாணம். (8654)

## சித்திர வகுப்புககள்

3-10-95 [செவ்வாய்] புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன. இல. 6, பெண்டிக்கோஸ் லேன், கண்டி வீதி, கச்சேரியடி. (38749)

## தவறிவிட்டது

18-9-95 திங்கள் இரவு கிளாலி இக்கரையில் மகளின் திருமணத்திற்காக செய்து கொண்டுவந்த தாலிக்கொடியும், ஒரு தொகைப் பணமும், நகைகளும் தவறிவிட்டன. கண்டெடுத்தோர் தயவு செய்து சோமசுந்தரம் அம்பிகாபதி, 167/1, கொழும்புத்துறை பிரதான வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [38718]

## அன்பளிப்பு

இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்த மக்களை வரணி இயற்றாலையில் குடியமர்த்தும் திட்டத்திற்கென சாவகச்சேரி லயன்ஸ் கழகம் 10 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கி உள்ளது.

அண்மையில் சாவகச்சேரி மாவட்ட வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் லயன்ஸ் கழக உறுப்பினர் திரு. க. ஜீவகதாஸ், மேற்படி திட்ட இணைப்பாளரான திரு எஸ். பாலகுருவிடம் இத் தொகையை கையளித்தார்.

---

**A/L 96**
**Day Classes**

கணித, உயிரியல்
மீட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம்:
5 – விா. 8 மணி
தொடக்கம்:
1 p m. வரை

அனுமதிகள் வழங்கப்படுகிறது.

**P.N. SCIENCE CENTRE**
யாழ்ப்பாணம்.

(சி-2388)

---

## சைன் மனையியல் கல்வியகம்

370, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

மனையியல் டிப்புளோமா வகுப்புகள் புதிய பிரிவு ஆரம்பமாகி விட்டன.
சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும.

— நிர்வாகி.

(38772)

---

## பிரத்தியேக கணக்கியல் வகுப்பு

### சயன்ஸ் அக்கடமி

நல்லூர்

**96 A/L 97 A/L**

ஆரம்பம்: **03 - 10 - 95**
[செவ்வாய் 4-30 P.M.]

MR. T. S. ஞானேஸ்

(செவ்வாய் மாலை 4 - 30 மணிக்கு மாணவர்கள் நேரடியாக ஆசிரியரிடம் நேர அட்டவணையை பெறவும்) (38736)

---

## A/L 96

### கணித, உயிரியற் பிரிவு

பகல் முழுநேர வகுப்பு
மாலை இரவு நேர வகுப்பு

ஆரம்பம்: **06 - 10 - 1995**

திரு. தில்லைநாதன், திரு. குமரன், திரு. ஞானி, திரு. வர்ணம் திரு. கெங்காதரன், திரு. ஐங்கரநேசன், திரு. குணம்.

★ அனுமதிகள் 03-10-95 அன்று காலை 9மணியிலிருந்து மாலை 5மணிவரை மாத்திரமே வழங்கப்படும்.

★ முழுப்பாடத்திட்டமும் மீட்டல் செய்யப்படும்.

★ பகல் முழுநேரவகுப்பில் பாடசாலை செல்லாத மாணவர்களுக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்படும்.

**யூனிவேர்சல்** கந்தர்மடம் யாழ்ப்பாணம்.

(சி/2381)

---

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில்: 30 – 05 – 1921
விண்ணில்: 02 – 10 – 1986

திருமதி
### மரியரத்தினம் குணரத்தினம்

ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

அன்பு கணவர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

புளையிரத ஒழுங்கை,
சாவகச்சேரி. (38681)

---

## பட்டப்பின் கல்வித்தகைமை கற்கைநெறி 1994 / 95 நேர்முகபரீட்சை

பட்டப்பின் கல்வித் தகைமைப் பரீட்சையிற் சித்தியடைந்த ஆசிரியர்களுக்குரிய நேர்முகப் பரீட்சை ஒக்டோபர் 14 ஆம் திகதி நடைபெறும்.

இந்நேர்முகப் பரீட்சை தொடர்பான கடிதங்கள் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன. இவர்களின் பெயர்ப்பட்டியலொன்று பல்கலைக்கழக அறிவித்தற் பலகையிலும் இடப்பட்டுள்ளது.

— பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
29-09-1995.

[சி-2376]

---

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 16 – 01 – 1932
மறைவு: 12 – 10 – 1994

அமரர்
### வீரசிங்கம் சின்னையா வீரசிங்கம்

(இளைப்பாறிய எழுதுநர், கமநல)

திதி: 02 – 10 – 1995

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கும்:

[illegible]

கைதடி. (8655)

---

## 6-வது வருட நினைவஞ்சலி



தோற்றம்: 12 – 08 – 1917
மறைவு: 08 – 10 – 1989

அமரர்
### இராமலிங்கம் தம்பிப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், புங்குடுதீவு -1)

திதி: 02 - 10 - 1995

அன்பால், பண்பால், பாசத்தால் எம்மை வழி நடத்தி வாழ்வூட்டிய எம் அன்புத் தந்தை எம்மை விட்டுப்பிரிந்து ஆண்டு ஆறு ஆனாலும் அவரது பாச நினைவுகள் என்றும் எம்மை விட்டு அகலாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்:

அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில். (38790)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிற்சிக்காக வடக்கு - கிழக்குக்கும் டாக்டர்கள் செல்வது கட்டாயம்

## சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு ஓக். 2

—மருத்துவத்துறைப் பட்டதாரிகள் தமக்கு அனுமதிக்கப்படும் ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பயிற்சி பெறுவது கட்டாயமாகும் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

தமக்கு ஒதுக்கப்படும் ஆஸ்பத்திரிகளில் சென்று பயிற்சி பெறவேண்டிய நிலையில் மொத்தம் 188 மருத்துவத்துறைப் பட்டதாரிகள் உள்ளனர்.

இவர்கள் கஷ்டப் பிரதேச ஆஸ்பத்திரிகளுக்குச் சென்று பயிற்சி பெற மறுத்துவருகின்றனர்.

இது குறித்து கருத்து தெரிவித்த சுகாதார அமைச்சர் ஏ. எச். எம். பௌசி இவர்களை நாங்கள் கஷ்டப் பிரதேசங்களுக்குச் செல்லுமாறு பலாத்காரப்படுத்தவில்லை என்றும் —

இவர்களில் 12 பேருக்கே வடக்கு - கிழக்கில் பயிற்சி பெறச் செல்லுமாறு பணிக்கப்பட்டுள்ளது. இவர்கள் பணிபுரிய முடியாத சூழ்நிலை அங்கு இல்லை என்றும் தெரிவித்தார். [ஐ-4]

# யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளக டாக்டர்களாக புதிதாக ஆறுவர் நியமனம்

யாழ். போதனா வைத்தியசாலையில் உள்ளகப் பயிற்சி டாக்டர்களாக புதிதாக ஆறு பேர் நியமனம் பெற்றனர்.

கடந்த வெள்ளிக்கிழமை முதல் நியமனம் வழங்கப்பட்ட இந்த டாக்டர்களில் ஐவர் அன்றைய தினமே கடமையைப் பொறுப்பேற்றனர்.

தற்போது வைத்தியசாலையில் போதியளவு டாக்டர்கள் இல்லாமல் பற்றாக்குறை நிலவுகிறது.

இந்த நிலையில் புதிதாக டாக்டர்கள் நியமிக்கப்பட்டுள்ளது ஓரளவாவது இக்குறைபாட்டை நிவர்த்தி செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-15)

# இலங்கை வங்கிக் கிளைகள் முன் மறியல் போராட்டம் நடத்த முயற்சி

யாழ். மாவட்டத்திலுள்ள இலங்கை வங்கி கிளைகளில் வாடிக்கையாளர்களுக்கான கொடுப்பனவு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதை எதிர்த்து—

இலங்கை வங்கிக் கிளைகளுக்கு முன்னால் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் மறியல் போராட்டம் நடத்த யாழ். மாவட்ட வங்கி வாடிக்கையாளர் நலன் காக்கும் சங்கம் தீர்மானித்துள்ளது.

ஆயிரம் ரூபாவுக்கு உட்பட்ட தொகையையே யாழ். மாவட்ட இலங்கை வங்கிக் கிளைகள் தற்போது வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றன. இதனால் வாடிக்கையாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதனை நிவர்த்தி செய்யும் வகையில் இலங்கை வங்கி கிளைகள் ஒரு மாதகாலத்துக்குள் கொழும்பில் இருந்து பணத்தைத் தருவித்து வாடிக்கையாளர்களுக்கு அசௌகரிய மற்ற விதத்தில் வழங்கவேண்டும்.

அவ்வாறு செய்யாத பட்சத்தில் நவம்பர் முதலாம் திகதி முதல் வங்கிக் கிளைகளுக்கு முன்னால் மறியல் செய்யப் போவதாக வங்கி வாடிக்கையாளர் நலன் காக்கும் சங்கம் அறிவித்துள்ளது.

# உலக வங்கி, நாணயசபை கூட்டம் வாஷிங்டனில்

## 10 ஆம் திகதி ஆரம்பம்

கொழும்பு, ஓக். 2

இலங்கை அரசு தனக்குரிய பொருளாதார உதவிகளைப் பெறுவதற்கான மிக முக்கிய கூட்டமான உலகவங்கி, சர்வதேச நாணய சபை ஆகியவற்றின் வருடாந்தக் கூட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி வாஷிங்டனில் ஆரம்பமாகிறது.

ஒக்ரோபர் 12ஆம் திகதி வரை 3 நாட்களுக்கு இந்த கூட்டம் நடைபெறும்.

[7 ஆம் பக்கம் பார்க்க]

# ஆயுதப் பயிற்சித்திட்டம் மக்களுக்கு அச்சுறுத்தல்

## ஐ. தே. க. பிரமுகர் கூறுகிறார்

சிங்கள இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சி வழங்கும் அரசின் திட்டத்தால் சாதாரண மக்களின் வாழ்வுக்கு அச்சுறுத்தல் ஏற்படும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரான திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கிராமங்களின் பாதுகாப்புக்கெனக் கூறி இளைஞர்களுக்குஅரச பயிற்சியளித்து வருகிறது இவர்களில் 90 சதவீதமானோர் ஆயுதங்களுடன் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகின்றனர்.

பொ. ஐ முன்னணிக்கட்சி உறுப்பினர்களில் இருந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த ஆயுதக் குழுக்கள் எதிர்க்கட்சியினரை அழிக்க உருவாக்கப்பட்ட சட்டரீதியான மரணப் படை போன்று உள்ளன.

— இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## பங்களாதேஷ் பிரதமர்

# காலிதாவுக்கு எதிரான போராட்டம் வலுக்கிறது

பங்களாதேஷின் பிரதமர் காலிதா ஸியாவுக்கு எதிரான போராட்டத்தில முக்கிய எதிர்க் கட்சியான அவாமி லீக் கட்சியினர் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

காலிதா ஸியாவுக்கு எதிராக கடந்த வெள்ளி முதல் 6 நாள் தொடர் வேலை நிறுத்தத்திலும் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இது தவிர எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திலும் காலிதா ஸியாவுக்கு எதிராக தொடர் போராட்டங்களை நடத்தப் போவதாகவும் எதிர்க்கட்சியினர் எச்சரித்துள்ளனர்.

ஒக்டோபர் மாதம் 7 ஆம் திகதிமுதல் தலைநகர் டாக்கா உட்பட முக்கியமான 6 தலைமையகங்களில் சுமார் 48 மணி நேரம் வரை போராட்டம் மற்றும் பேரணி நடத்தவும் அவாமி லீக் கட்சித்தலைவி ஹசீனா திட்டமிட்டுள்ளார்.

அதே சமயம் ஒக்டோபர் 14 ஆம்திகதி நடைபெறவுள்ள நான்கு நாள் வேலை நிறுத்தத்தில் சுமார் 2 லட்சத்து 50 ஆயிரம் பேர் வரை பங்கேற்பர் எனவும் அவர் தெரிவித்தார். [ஓ-எ]

## சிறுமி மீது பாலியல் வன்முறை:

# அமெரிக்க தளங்களை அகற்றுமாறு ஜப்பானியப் பெண்கள் ஆர்ப்பாட்டம்

டோக்கியோ, ஓக். 2

ஜப்பானில் உள்ள அமெரிக்க இராணுவத் தளங்களை உடனடியாக அகற்ற வேண்டும் என்று கோரி ஜப்பானியப் பெண்கள் தலைநகர் டோக்கியோவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தப் பேரணியில் சுமார் 300 பேர் பங்கேற்றனர்.

அண்மையில் ஜப்பானில் உள்ள அமெரிக்கத் தளங்களைச் சேர்ந்த 3 அமெரிக்கப் படையினர், 12 வயதுடைய ஜப்பானிய பாடசாலை சிறுமி ஒருத்தியை கடத்திச் சென்று பாலியல் வன்முறைக்கு உட்படுத்தினர்.

ஒக்கினோவாவில் கடந்த செப்ரம்பர் 4ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவத்தை அடுத்தே அமெரிக்க எதிர்ப்பு உணர்வு ஜப்பானிய மக்களிடையே எழுந்தது.

"இந்தச் செயலை ஒருபோதும் மன்னிக்க முடியாது; அமெரிக்க இராணுவத் தளங்கள் இங்கு தேவையில்லை" என்று பேரணியில் பங்குபற்றியோர் கோஷங்களை எழுப்பினர். (எ)

# அணு ஆயுத சோதனையை எதிர்த்து பாரிஸில் பேரணி

பாரிஸ், ஓக். 2

தென் பசுபிக் சமுத்திரத்தில் அணு ஆயுதப் பரிசோதனைகளை நிறுத்தும்படி கோரி ஆயிரக்கணக்கான மக்கள் பாரிஸ் வீதிகளில் பேரணி நடத்தினர்.

கடந்த செப்ரெம்பர் 5 ஆம் திகதி முதலாவது அணு பரிசோதனையை நடத்திய பிரான்ஸ் இரண்டாவது பரிசோதனையை விரைவில் நடத்தவுள்ளது.

இப்பொழுது தம்மிடம் உள்ள அணு ஆயுதங்களை சரிபார்ப்பதற்கு இப்பரிசோதனைகள் அவசியமானவையென்று பிரான்ஸ் ஜனாதிபதி சிறாக் கூறியுள்ளார். [எ]

# பாகிஸ்தானுக்கு ஆயுதம் வழங்கும் முடிவை மாற்றுக

## அமெரிக்காவிடம் இந்தியா கோரிக்கை

புதுடில்லி, ஓக். 2

பாகிஸ்தானுக்கு இராணுவ தளபாடங்களை வழங்குவது என்ற முடிவை மறுபரிசீலனை செய்யுமாறு அமெரிக்காவை இந்திய வெளியுறவு இணை அமைச்சர் ஆர். எல். பாட்டியா வறயுறுத்தி இருக்கிறார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு முட்டுக்கட்டையாக அமெரிக்காவின் இந்த நடவடிக்கை அமைந்துவிட்டது என்று அவர் கூறினார். (எ-க)

# குஜராத் மாநிலத்தை ஆளும் பாரதிய ஜனதாவில் பிளவு

புதுடில்லி, ஓக். 2

இந்தியாவின் குஜராத் மாநிலத்தில் ஆளும் பாரதீய ஜனதாக் கட்சி பிளவு பட்டு விட்டது.

கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட அதிருப்தியாளர் குழுவின் தலைவர் திரு. சங்கர் சிங் வாகலே தமக்கு ஆதரவு தரும் 54 எம். எல். ஏக்களின் பெயர் பட்டியலை சாநாயகரிடம் சமர்ப்பித்துள்ளார்.

பாரதீய ஜனதாவின் பிரிந்து சென்ற குழுவாக அதை அங்கீகரிக்குமாறு அவர் சபாநாயகரிடம் கேட்டுக் கொண்டார்.

கட்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக திரு. சங்கர் சிங் வாகலேயை பாரதிய ஜனதா கட்சியின் புதுடில்லி தலைமைப் பீடம் ஆறு ஆண்டுகளுக்கு கட்சியில் இருந்து வெளியேற்றி விட்டதைத் தொடர்ந்தே இந் நிலைமை ஏற்பட்டுள்ளது.

# தீபாவளியன்று சூரிய கிரகணம்

புதுடில்லி, ஓக். 2

இந்த மாதம் 23ஆம் திகதி தீபாவளி தினத்தன்று சூரிய கிரகணம் ஏற்படவுள்ளது.

இந்தியாவின் ராஜஸ்தான், உத்தர பிரதேசம், பீகார், மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் சுமார் 50 கிலோமீற்றர் அகல நிலப்பரப்பு நெடுகிலும் பூரண கிரகணம் [illegible] பகுதிகளில் ஓரளவு [illegible] படும் எனவும் அறிவிக்கப்பட்டது. (எ)



# 4-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 08 — 11 — 1958



மறைவு: 02 — 10 — 1991

## செல்வன் வசந்தன் சண்முகநாதன்

(யாழ். இந்துக்கல்லூரி உயர்தர வகுப்பு பழையமாணவன்)

கருவிலே திருநிறைந்த எங்கள் செல்வமே! அரும்பாகி, மொட்டாகி, அழகான பூவாகி, பிஞ்சிலே உதிர்ந்து போன எங்கள் அன்பு மகனே, சகோதரனே ஆண்டுகள் நான்கானாலென்ன? நூறானாலென்ன? மாறாது என்றுமே உன் நினைவுகள்.

உங்கள் ஆத்மா சாந்தியடைந்து நன்னிலை பெற இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! ஓம் சாந்தி!!!

என்றும் உன் நினைவுகளில் வாழும்;
அன்பு அம்மா, சகோதரிகள்,
அத்தான்மார், மருமக்கள்.

புங்கன்குளம் சந்தி,
அரியாலை.

[38793]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளங் கலைஞர் மன்றம்

## வாணி விழாவையொட்டிய மாதாந்த நிகழ்ச்சி

பலாலி வீதி, திருநெல்வேலி.
"சிற்றி காமென்ஸ்" ஆதரவில்

இடம்: மன்றக் கலாமண்டபம்
சட்டநாதர் வீதி, நல்லூர்.

காலம்: **03-10-1995** செவ்வாய்
மாலை 4-30 மணி

### ★ நிகழ்ச்சி நிரல் ★

மாலை

4-30 — 4-50 மிருதங்க இசை
ஜெ. சங்கர், ச. சுதர்சமோகன்
கி. அகிலன், சி. சிவசிவா

4-50 — 5-05 வயலின் இசை
மன்ற மாணவர்கள்

5-05 — 5-25 பாட்டு
மன்ற மாணவர்கள்

5-25 — 5-45 வீணையிசை;
ஜனாகி ஜெயராமசர்மா
சஷீயந்தி மயில்வாகனம்
தயானி நாகச்சந்திரா
ஜனனி திருஞானசம்பந்தர்
தாக்ஷாயணி தர்மரநாதன்
டில்ருக்ஷி சிவராஜா
நிரூக்ஷி சிவராஜா — வீணை
எஸ். துரைராஜா — மிருதங்கம்

5-45 — 7-00 இசைக்கச்சேரி,
கனகாம்பகி பத்மநாதன் — பாட்டு
சாந்தநாயகி சுப்பிரமணியம் — வயலின்
கே. கண்ணதாசன் — மிருதங்கம்
சதா வேல்மாறன் — கடம்

7-00 — 7-30 மங்கள விளக்கேற்றல்
திரு. செ. சிவலிங்கம் அவர்கள்
(சிற்றிகாமென்ஸ், உரிமையாளர்)
திரு. செ. வாமதேவன் அவர்கள்

தலைமையுரை:
திரு. எம். வேதநாதன் எம். ஏ. அவர்கள்
(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ். பல்கலைக் கழகம்)

பிரதம விருந்தினர் உரை;
திரு. த. வைத்திலிங்கம் அவர்கள்
(பிரதேச செயலர், சண்டிலிப்பாய், மேலதிக அரசாங்க அதிபர்)

7-30 — 8-45 சாஸ்திரீய மெல்லிசை:
எஸ். பத்மலிங்கம் — பாட்டு
ஆர். ராதாகிருஷ்ணன் — வயலின்
எம். கோபாலகிருஷ்ணன் (கண்ணன்) — ஆர்மோனியம்
ஜி. முரளி — கிற்றார்
எஸ். வாசன் — "
இரா. சிவராம் — தபேலா
கே. மயூரன் — "

8-45 — 9-30 "பரதநாட்டியம்"
மன்ற மாணவிகள்

தயாரித்து வழங்குபவர்:
நாட்டியக் கலைமணி வசந்தி பொன்னுத்துரை,
பாட்டு: சரோஜினி கி. மெகன்மோகினி ஜெ.

கலா ரஸிகர்கள்
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

— மேற்படி மன்றத்தினர்

## விஜயதசமி பூஜையும் நாள் வகுப்பும்

**03-10-1995** செவ்வாய்
பிற்பகல் 2-30 — 4-30 மணிவரை

நாள் வகுப்புகள் ஆரம்பித்துவைக்கப்பெறும்

ஒவ்வொரு சனி, ஞாயிறு நாட்களில்
காலை 8-00 — 12-00 மணிவரை

சிறந்த இசைக்கலைஞர்களால்
வாய்ப்பாட்டு வயலின், வீணை, மிருதங்கம்,
பரத நாட்டியம் என்பன பயிற்றுவிக்கப்பெறும்

மேலும் விவரங்களுக்கு மேற்படி மன்றத் தலைவருடன் தொடர்பு கொள்ளவும்.

— ஷெ மன்றத்தினர்

---

பருத்தித்துறை
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)
பருத்தித்துறை

## பதவி வெற்றிடம்

### லொறிச்சாரதி – 312/12

மேற்படி பதவிக்கு கீழ்க்காணும் தகுதிகளை உடைய தமிழீழ பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்பத்திரங்களை எமது சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

1. வயதெல்லை
18 க்கும் 40 க்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும். (பல நோ. கூ. சங்கத்தின் சேவையிலிருப்போருக்கு வயதெல்லை கவனிக்கப்படமாட்டாது)
2. தகைமைகள்
5 ஆம் தரத்திற்கு மேல் சித்தியடைந்திருத்தல் வேண்டும். பஸ் / லொறி / பெட்டியுடன் டிராக்டர் செலுத்தும் அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல். இத்துடன் அண்மையில் லொறிச் சாரதியின் 2 வருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.
3. பிணை:
ரொக்கப் பிணை ரூபா 10,000/- செலுத்த வேண்டும்.
4. சம்பளம்;
ரூபா 1060/- ரூபா 1485/-
25 X 10 — 85 X 5
5. உள்ளடக்கப்பட வேண்டியவை:
பிறப்புச்சான்றிதழ், கல்விச்சான்றிதழ், வாகனம் ஓட்டும் அனுமதிப்பத்திரம், நற்சான்றுப்பத்திரங்கள், வதிவுத் தகைமைச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதிகள்.
6. விண்ணப்ப முடிவு திகதி: 1995 - 10 - 20

விண்ணப்பப் பத்திரங்களை காரியாலயத்தில் பெற்று பூர்த்தியாக்கி 1995 - 10 - 20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத்தபாலில் 'தலைவர், பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பருத்தித்துறை' என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். நீங்கள் அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "லொறிச் சாரதிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடல் வேண்டும்.

— தலைவர்.

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
1995 - 09 - 28 [சி 2390]

---

வேம்படி மகளிர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம்

## ஆண்டுப் பொதுக் கூட்டம்

08 – 10 – 1995 ஞாயிற்றுக்கிழமை

10-00 கல்லூரிக் கொடியேற்றல்
சிறப்புரைகள்
12-00 பொதுக் கூட்டம்
1-00 நண்பகல் விருந்து

இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு பழைய மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

திருமதி சௌ. குணசீலன்,
செயலாளர்.

குறிப்பு:
நண்பகல் விருந்தில் பங்கு பற்றுவோர் தயவு செய்து தங்கள் பெயர்களை கல்லூரி அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுங்கள்.

ரூபா 100/-

[சி-2383]

---

## மன்றத்தின் வெள்ளி விழாவும் 16 ஆவது இசை விழாவும்

96 ஆம் ஆண்டு மாசிமாத முதல் வாரத்தில்
15 தினங்கள் நடைபெறவிருப்பதால்

வாய்ப்பாட்டு, வயலின், வீணை, புல்லாங்குழல், மிருதங்கம், நாதஸ்வரம், தவில் ஆகியவற்றில் தனி, குழு நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் இளம் கலைஞர்கள் தங்கள் தகுதியினை உறுதிப்படுத்தி விண்ணப்பங்களை 30 - 11 - 95 க்கு முன் இளங்கலைஞர் மன்றம் சட்டநாதர் வீதி, நல்லூர் என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்கவும்.

★ தங்கள் நிகழ்ச்சிக்கான பக்க வாத்தியக் கலைஞர்களைத் தாங்களே ஒழுங்கு செய்வதோடு அவர்களின் பெயர்களை விண்ணப்ப படிவத்தில் குறிப்பிடும் படி கேட்டுக் கொள்கிறோம்.

— ஷெ மன்றத் தலைவர்.
(சி-2387)

---

## பதுங்குகுழி அமைப்பதில் தீவிரம்

வடமராட்சி பகுதியில் படையினரின் ஷெல் வீச்சுகளில் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக பதுங்கு குழிகளை அமைப்பதில் மக்கள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

பொலிகண்டிப் பகுதியில் மக்கள் கூடும் பொது இடங்களிலும், வீடுகளிலும் அப்பகுதி இளைஞர்கள் பதுங்கு குழிகளை அமைத்து வருகின்றனர். (எ-மு)

## சீரற்ற வீதி

செம்பியன்பற்று, ஒக். 2
மாமுனைக்கும், செம்பியன் பற்றுக்கும் இடைப்பட்ட கடற்கரையோர வீதியால் போக்குவரத்து செய்ய முடியாத நிலை தோன்றியுள்ளது.

மணல் நிறைந்து காணப்படும் இந்த வீதியூடாக மாமுனை சந்தையில் இருந்து பளைக்கு மீன் கொண்டு செல்லும் வியாபாரிகள் தமது வாகனங்களை ஓடிச் செல்ல முடியாது சிரமப்படுவதைக் காணக் கூடியதாக உள்ளது. [எ-ரி]

### புலிகளின் குரல் வானொலியில்

02 – 10 – 1995
திங்கள் இரவு
★ 8-02— தவிர்க்க இறுவர்களுக்கான நிகழ்ச்சி
★ 8-20— சமகாலப் பார்வை
★ 8-30 — செய்திகள்
★ 8-40— தரிசனம் — நிகழ்ச்சியில் மரபுவழி இசைநாடகக் கலைஞரும் ஓவியக்கலைஞரும், பாடகருமாகிய, திரு. வே. க. பாலசிங்கத்துடனான செவ்வி

03 – 10 – 1995
செவ்வாய் காலை
★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15— இன்றைய தாரகை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள் தொடர்ந்து தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

திங்கள் மாலை
★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15— ஆழியமுதம்
★ 5-30— மாணவர் பக்கம்
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-10 — செய்திகள்
★ 6-15— விளையாட்டுச் செய்திகள்
★ 6-20— நேயர் நெஞ்சம்

## தாச்சி சங்கத்தின் விசேட கூட்டம்

யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் விசேட கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு கோண்டாவில் மாவட்டச் செயலக ஒன்று கூடல் மண்டபத்தில் நடைபெறும். இதில் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தில் பதிவு செய்த கழக உறுப்பினர்களையும், யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு வட்ட இணைப்பாளர்களையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை — யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் மாதாந்த கூட்டமும் அன்று முற்பகல் 10 00 மணிக்கு நடைபெறும் இதில் யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழு உறுப்பினர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. [ஐ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

391/1 நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## கண்டுபிடித்தால் போதுமா?

இராணுவ மற்றும் பொலிஸ் தடுப்பு முகாம்களில் சட்டத்துக்கு முரணானமுறையில் சுமார் அறுநூறு பேர் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

அரசாங்கம் நியமித்த மனித உரிமைச் செயலணி (Human Rights Task Force) இந்தப் புள்ளி விவரத்தை வெளியிட்டுள்ளது.

மனித உரிமைகள் பேணப்படுவதை உறுதி செய்வதே இந்தச் செயலணி அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கம்.

சட்டவிரோதமாக, சட்டத்துக்கு முரணாக, உரிய விதிமுறைகளை மீறி, தடுத்து வைக்கப்பட்டுள்ள 600 பேரும் தமிழர்கள். கொழும்பின் பாதுகாப்பைத் தீவிரப்படுத்துவது என்ற பேரில், விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில், தென்னிலங்கைப் பகுதியில் விடுதிகளிலும், வீதிகளிலும், வீடுகளிலும், ரயில் நிலையங்களிலும், திரைப்பட அரங்குகளிலும், பூங்காக்களிலும், கடற்கரைகளிலும், தொழில் நிலையங்களிலும் பிடிக்கப்பட்டவர்களே இவர்கள். இரவிலும் பகலிலும் பால், வயது வேறுபாடின்றி பொலிஸாரினாலும், படையினராலும் கூட்டிச் செல்லப்பட்டவர்களே இவர்கள்.

தலைநகரையும் அதன் சுற்றுப் புறங்களையும் குண்டு வெடிப்பு மற்றும் தற்கொலைப் படைகளிடமிருந்து பாதுகாப்பதாகக் கூறிக்கொண்டு, கொழும்பில் ஆயிரக்கணக்கில் தமிழர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் சட்டத்துக்கு முரணான விதத்தில் தடுத்து வைக்கப்பட்டனர். இம்சிக்கப்பட்டனர்; சித்திரவதை செய்யப்பட்டனர்.

அவர்கள் எல்லோரினது விவரங்களையும் மனித உரிமைச் செயலணி திரட்டியிருக்கும் என்று நாம் நம்பவில்லை. இது சம்பந்தமாகக் கிடைத்த புகார்களை மட்டும் தகவல்களாக வைத்து அவை குறித்து விசாரித்து, ஊர்ஜிதம் செய்திருக்கும்; அவ்வளவுதான். உறவினர்களால் புகார் தெரிவிக்கப்படாத இன்னும் நூற்றுக்கணக்கானோர் பற்றிய விவரம் செயலணிக்குக் கிடைத்திருக்காது!

அதாவது வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படாத தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்கள் இன்னமும் நிறைய உண்டு.

சரி, பகிரங்கப்படுத்தப்பட்ட மனித உரிமை மீறல்கள் குறித்தாவது, அதில் சம்பந்தப்பட்டோர் மீதேனும் — சட்டவிரோதமாகச் செயற்பட்டுள்ள பொலிஸார் படையினர் மீது அரசு நடவடிக்கை எடுக்குமா என்பது சந்தேகமே!

மனித உரிமைகளைப் பேணுவதாக வெளி உலகத்துக்குக் காட்டிக் கொள்வதற்காகவே செயலணி இராணுவ நடவடிக்கையின் போது தூர இருந்து ஷெல் எறிந்து நிராயுதபாணிகளான பொதுமக்களைக் கொல்லும் படையினருக்கு குற்ற விலக்கு அளிக்கப்படுகிறது. அதே போன்று மனித உரிமைகளை மீறும் படையினருக்கும் குற்ற விலக்கு அளிக்கப்படும். முந்தியது உத்தியோகபூர்வமாக சட்ட ரீதியாக நடைமுறையாகிறது; பிந்தியது இரகசியமாக அமுல் நடத்தப்படும். அவ்வளவுதான்!

# சமாதான நிலை வந்த பின்னரே அதிகாரப் பகிர்வு பற்றிப் பேசுக!

## அரசை வற்புறுத்துகிறார் மல்வத்தை பீடாதிபதி

"நாட்டில் சமாதானம் தோற்றுவிக்கப்பட்ட பின்னரே அதிகாரப்பரவலாக்கல் யோசனை பற்றிய கலந்துரையாடல் நடத்தப்பட வேண்டும்"

— இப்படிக் கூறியுள்ளார் மல்வத்தை பீடத்தின் மகாநாயக்கரான ரம்புக்கல்ல ஸ்ரீ விபாசி நாயக்கதேரர்.

"நாட்டை எதிர்நோக்கியுள்ள நெருக்கடிக்கு தீர்வு காண்பதே இன்றைய தேவையாகும். சமாதானத்தை நிலைநாட்டுவதிலேயே முதலில் கவனம் செலுத்தப்பட வேண்டும்" என்றும் அவர் கூறினார்.

தேசிய பாதுகாப்பு நிதிக்கு தாம் சேகரித்த 5 லட்சத்து 25 ஆயிரம் ரூபாவை பிரதிப் பாதுகாப்பு அமைச்சரிடம் கையளித்த வைபவத்தில் பேசுகையிலேயே மகாநாயக்க தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

15 ஆயிரம் கிராமவாசிகளிடம் இருந்து இந்நிதி பெறப்பட்டதாக தேரர் தெரிவித்தார். (உ-8)

# நேற்றுப் பகல் ஷெல்லில் காயமுற்றோர்

வலிகாமம் கிழக்குப் பகுதி மீது நேற்றுப் பகல் படையினர் நடத்திய ஷெல் தாக்குதல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகங்களில் காயமடைந்த பொதுமக்களில் 21 பேரின் விவரம் வருமாறு:

ஆவரங்கால் சிவன்கோவில் பகுதியில் விழுந்த ஷெல்களினால்—

★ சுப்பர் வல்லிபுரம் [வயது 82] — இடைக்காட்டிலிருந்து இடம்பெயர்ந்து அச்சுவேலியில் வசித்து வந்தவர்.

★ எம். செல்வம் [வயது 70] — ஆவரங்காலைச் சேர்ந்தவர்.

புத்தூர் கிழக்கில் விழுந்த ஷெல்லினால்—

★ சிற்றம்பலம் கமலநாதன் [வயது 41] — புத்தூர் கிழக்கு வாசி

★ இராமு யோகராசா [வயது 40 — ஆவரங்காலைச் சேர்ந்தவர் — இடைக்காட்டு பிரிவு கிராம சேவகர் அச்சுவேலியிலிருந்து ஷெல்லுக்கு அஞ்சி ஓடிக்கொண்டிருந்த போது காயமுற்றார்.]

★ சீனிவாசகம் சொரூபலிங்கம் [வயது 40] — அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முத்திரைக் காசாளர். பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து புத்தூரில் வசிப்பவர்.

★ நடராசா சற்குணம் [வயது 45]— பலாலியிலிருந்து இடம்பெயர்ந்து நவக்கிரியில் வசித்து வந்த பெண்மணி.

புத்தூர் மத்தியில் விழுந்த ஷெல்லினால்—

★ மயில்வாகனம் நல்லபிள்ளை (வயது 48) — இவருடன் இருந்த இவரின் கணவர் ஷெல்லுக்குப் பலியானார்.

★ கந்தகண்டு லீலாதேவி [வயது 43] — வலது கையை முற்றாக இழந்தார்.

★ தங்கவேல் மஞ்சுளா [வயது 16] — நவக்கிரியில் இருந்து ஓடிய சமயம் ஷெல்லுக்கு இலக்கானார்.

நீர்வேலி வடக்கில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலினால் —

★ சினிவாசகம் சிவக்கொழுந்து [வயது 62] — இப்பெண்மணியின் வலது கால் முழங்காலுடன் துண்டிக்கப்பட்டது.

★ சின்னத்தம்பி பொன்னுத்துரை [வயது 72]

சிறுப்பிட்டி மேற்கில் இடம்பெற்ற ஷெல்தாக்குதலில் —

★ சரஸ்வதி (வயது 35)

★ பி. ரூபினி (வயது 14)— சிறுப்பிட்டியைச் சேர்ந்தவர்

ஈவினையில் இராணுவத்தினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி —

★ அரசலிங்கம் சிவகுமார் [வயது 35]

ஷெல்லினால் காயமுற்ற ஏனையோர் —

★ பி. சோதிலிங்கம் (வயது 45) — ஆவரங்கால் வாசி

★ எஸ். கேதீஸ்வரன் — நவக்கிரி வாசி

★ எஸ். பகீரதகணேசன் [வயது 30] — புன்னாலைக்கட்டுவன்

இவர்கள் அனைவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தவிர, ஷெல்தாக்குதலில் காயமுற்ற —

★ கமலநாதன் கவிதி [வயது 18] — புத்தூர்

★ ஜெயராஜ் சுபாஜினி [வயது 28] — புத்தூர்

— ஆகிய இருவரும் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப் பட்ட பின்னர் வெளியேறினர்.

ஷெல்லினால் காயமுற்ற —

★ சாந்தாதேவி [வயது 32]— ஆவரங்கால் கிழக்கு

★ சிவவர்ணன் (வயது 23] — ஆவரங்கால் கிழக்கு

— ஆகிய இருவரும் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

ஷெல்லினால் காயமுற்ற மற்றும் சிலர் கோப்பாய் ஆஸ்பத்திரியிலும் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அவர்களின் பெயர் விவரங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

(உ-3-13-15-3)

# வீதிகளில் விசேட சேவையில் தமிழீழ காவல்துறையினர்

யாழ்ப்பாணம், ஒக். 2

வலிகாமம் கிழக்குப் பகுதி மீது படையினர் நடத்தும் ஷெல் தாக்குதல்களில் காயமுற்றோரை ஏற்றிவரும் வாகனங்கள் இடையூறின்றிச் செல்வதற்கு வசதியாக தமிழீழக் காவல் துறையினர் நேற்று விசேட வீதி ஒழுங்குச் சேவையில் ஈடுபட்டிருந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மோதல் நடைபெற்ற இடம் வரை காவல்துறையினர் சந்திக்கு சந்தி வீதி ஒழுங்குச் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

மக்கள் கூட்டமாகச் செல்வதைத் தடுத்தும், ஓரமாகச் செல்லுமாறு அவர்களை அறிவுறுத்தியும் வாகனங்களின் நெருக்கடி ஓட்டங்களைக் கட்டுப்படுத்தியும் காவல்துறையினர் வீதி நெருக்கடிகளைத் தவிர்த்தனர். [உ-15]

# நேற்றிரவும் மக்கள் கூட்டமாக இடம் பெயர்வு

படையினரின் ஷெல் தாக்குதல்களுக்கு அஞ்சி வலிகாமம் கிழக்குப் பகுதி மக்கள் நேற்றிரவு வேளையிலும் இடம் பெயர்ந்த வண்ணம் இருந்தனர்.

அச்சுவேலி, ஆவரங்கால், புத்தூர் பகுதிகளில் இருந்து நேற்றுக் காலை இடம் பெயர்ந்து நீர்வேலிப்பகுதியில் வந்து தங்கியிருந்த மக்கள், நீர்வேலிப் பகுதியிலும் ஷெல் விழத் தொடங்கியதையடுத்து நேற்றிரவோடு இரவாக அப் பகுதியிலிருந்தும் மூடை முடிச்சுகளுடன் நகரத் தொடங்கினர்.

இடம்பெயர்ந்து நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி இடைக்காடு மகா வித்தியாலயம் மற்றும் ஆலயங்கள், வீதியோரங்களில் தங்கியிருந்த மக்களே கூட்டம் கூட்டமாக வெளியேறி யாழ்ப்பாணம், இருபாலை கைதடி, நுணாவில், மட்டுவில், சரசாலைப் பகுதிகளை நோக்கிச் சென்றனர்.

இரவிரவாக ஷெல் வீச்சு தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டிருந்தது. (உ-15]

## ஆனையிறவில் மோதல்

கொழும்பு, ஒக். 2

ஆனையிறவில் நேற்றுக் காலை 10 மணியளவில் விடுதலைப்புலிகளுக்கும், படையினருக்கும் இடையில் மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாக ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கொழும்பில் செய்தி வெளியிட்டன. [உ-3]

# இப்படியும் நடந்தது!

யாழ்ப்பாணம், ஒக். 2

காலையில் உணவருந்திய வேளை ஷெல் வந்து வீட்டின் மேல் விழுந்தது. ஷெல் விழுந்த அதிர்ச்சியில் கையில் இருந்த சாப்பாட்டுக் கோப்பைகள் உயரத்தே தூக்கி வீசப்பட்டன.

ஆனால் அதிர்ஷ்டவசமாக அந்த வீட்டில் இருந்த எவரும் காயமடையவில்லை. அந்தச் ஷெல்லின் துண்டுகள் பறந்து சென்று அயலில் உள்ள இரு வீடுகளில் விழுந்ததில் இருவர் காயமுற்றனர்.

இச்சம்பவம் நீர்வேலி வடக்கில் நேற்று இடம் பெற்றது.

சிவக்கொழுந்து லோகநாதன் என்பவரின் வீட்டின் மேலேயே ஷெல் விழுந்தது. அதனால் வீடு முற்றாகச் சேதமுற்றது.

வீட்டுக்குப் புறம்பாக குசினியும் விறாந்தையும் உண்டு. அந்த விறாந்தையில் இருந்து லோகநாதன், அவர் மனைவி, பிள்ளைகள் உணவருந்தியபோதே ஷெல் விழுந்தது.

அங்கு விழுந்த ஷெல்லின் துண்டு பறந்து அயலில் [illegible] சி. பொன்னுத்துரை, சீனிவாசகம் சிவக்கொழுந்து [பெண்] ஆகிய இருவருமே காயமடைந்தனர். [உ-15]

உலக'...

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இலங்கையில் இருந்து பிரதிநிதி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தலைமையில் எட்டுப்பேர் அடங்கிய மட்டத் தூதுக்குழு வாஷிங்டனுக்குச் செல்லவுள்ளது. (ஒ-எ-5)

## மற்றொரு மாணவன் மரணம்

யாழ்ப்பாணம், ஒக். 2

நாகர்கோவில் மகா வித்தியாலயத்தின் மீது கடந்த 22 ஆம் திகதி இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சுச் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தவர்களில் நேற்றும் ஒரு மாணவன் உயிரிழந்தார்.

நாகர்கோவில் மேற்கைச் சேர்ந்த மயில்வாகனம் கணநாதன் (வயது 13) என்ற 8 ஆம் ஆண்டு மாணவனே உயிரிழந்தவராவார். (உ-13)

## ஆசிரியர் தின விழா

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள முன்பள்ளி ஆசிரியர்களுடைய ஆசிரிய தின விழா இம்மாதம் ஆறாம் திகதி காலை 8.30 மணிக்கு நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெறும். முன்பள்ளி ஆசிரியர்கள் அனைவரும் அன்றைய தினம் நல்லூர் கிட்டு பூங்காவுக்கண்மையில் இருந்து ஊர்வலமாக விழா மண்டபத்துக்கு அழைத்து வரப்படுவர். [உ-152]

கோப்பாய்,...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

★ அவரின் மகளான கவீந்திரதாஸ் திருமகள்(வயது 15)

★ பாலச்சந்திரன் பாலகிருஷ்ணன் [வயது 20]

★ கந்தசாமி சுகந்தன் (வயது 21)

★ கனகலிங்கம் குமுதினி [வயது 28]

★ குமுதினியின் மகளான கனகலிங்கம் சஜந்தினி [வயது 6]

★ பாலசிங்கம் நாகேஸ்வரி (வயது 50)

கோப்பாய் வடக்கு பேக்கரிப் பகுதியில் வீழ்ந்த ஷெல்லினால் ஐந்து பேர் காயமுற்றனர். அவர்களின் விவரம்:-

★ சிவபாதம் சிவலிங்கம் [வயது 27]

★ சங்கரப்பிள்ளை நவராசா [வயது 30]

★ காத்தமுத்து அமிர்தச்சந்திரன் [வயது 46] — திருகோணமலை வாசி இடது கண்ணை இழந்துள்ளார்.

★ லட்சுமணன் செல்வம் (வயது 28)

★ சின்னையா சயந்தன் (22 வயது)

புத்தூர் கிழக்கில் நேற்றிரவு ஏழு மணிக்கு வீழ்ந்த ஷெல்லினால் ஒரு பெண்மணியும் அவரது மூன்று பிள்ளைகளும் உட்பட எட்டு பேர் காயமுற்றனர். அவர்களின் விவரம்:-

★ மயில்வாகனம் அன்னபாக்கியம் [வயது 46]

★ மயில்வாகனம் தேவகி [வயது 22]

★ மயில்வாகனம் ஜானகி [வயது 20]

★ மயில்வாகனம் கண்ணகி (வயது 17)

★ சந்தசாமி கமலநாயகி [வயது 45]

★ அப்பு சிவசக்தி [52 வயது] — யாழ். போதனா வைத்திய சாலையில் மருத்துவ மாதுவாகப் பணிபுரிபவர்

★ தமிழ்ச் செல்வன் நவராணி [வயது 22] — இடது கை துண்டிக்கப்பட்டார்.

★ கமலநாதன் ரவிக்குமார் (வயது 8] [உ-15)

அச்சுவேலி-...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ஈடுபட்டுள்ளன.

அப்பகுதியில் பல மணி நேரமாக இடம்பெற்று வரும் சமரில் ஸ்ரீலங்கா இராணுவத்தினருக்கு பலத்த உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கலாம் என நம்பப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் செய்தி அச்சுக்குப் போகும் வரை இச் சமர் தொடர்ந்தது.

(உ-3-15]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜெயலலிதா ஆதரவாளர் தீக்குளித்து மரணம்!

சென்னை, ஒக். 2

தமிழக முதலமைச்சர் ஜெயலலிதாவின் சொத்துக்கள் குறித்து வருமானவரி அதிகாரிகள் விசாரணை நடத்துவதை ஆட்சேபித்து அவரது கட்சித் தொண்டரான பிராஸ்லின் என்பவர் தீக்குளித்து மரணமாகியிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

மற்றொரு ஆதரவாளரான ஆறுமுகம் என்பவர் நஞ்சருந்தினாராயினும் அவர் காப்பாற்றப்பட்டார்.

வருமானவரி அதிகாரிகள் நடவடிக்கை குறித்து அ.தி.மு.க. தொண்டர்கள் ஆத்திரம் கொண்டுள்ளதாக ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன. (உ-3)


# "வேரும் விழுதுகளும்"

## இன்று தான் இறுதிச் சந்தர்ப்பம்

இன்றுடன் (02 - 10 - 95) நிறைவடைகின்றது

## எங்களைத் தேடி......
## சென்றுவிட்டீர்களா?

— செஞ்சோலை நிர்வாகத்தினர்

[38802]

# NEW BRILLIANT ACCADAMY

Sankaththanai – Chavakachcheri

## SPOKEN ENGLISH with GRAMMAR

Lectures By:

**Mr. M. A. HARI**
(B.A, - Dip. - IN - Eng.)

ஆரம்பம்: **03 - 10 - 95**
செவ்வாய் பிற்பகல் 2-00 மணி

முன் கூட்டியே பதிந்து அனுமதிகள் பெறவும்

(சி-2392)



# எஸ்-எம்-பெர்ஞன்டோ

ஆதரவில்

யாழ். மிட் - ரவுண்
ரோட்டறக்ற் கழகம்

நடத்தும்

மிட் - ரவுண் கேடயத்திற்கான

6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான 5 ஓவர்

## கிரிக்கெற் சுற்றுப்போட்டி - 1995

இச் சுற்றுப் போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் கழகங்கள் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பப் படிவத்தை பெற்று சமர்ப்பிக்க வேண்டிய இடம்:

எஸ். எம். பெர்னான்டோ,
508, கேணல் கிட்டு சாலை,
யாழ்ப்பாணம்.

காலம் :-
இம்மாதம் 14 ம், 15 ம் திகதிகள்

இடம் :-
யாழ். இந்துக் கல்லூரி மைதானம்

செயற்திட்ட இயக்குநர்.

[சி-2393]


மேலும் 2 ஆம் பக்கத்தில் மரண அறிவித்தல்

## படையினர்நேற்--

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தன.

பி. பி. ஸி. இத்தகவலை வெளியிட்டது.

நேற்றைய நடவடிக்கை குறித்து பாதுகாப்பு அமைச்சு உத்தியோகபூர்வ அறிக்கை எதையும் இதுவரை வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையின் போது ஐயாயிரம் துருப்புகள் வரை ஈடுபடுத்தப்பட்டதாக லண்டனில் புலிகள் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது என்று பி. பி. ஸி. கூறியது.

## பருத்தித்துறை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

டிய பகுதியில் வீழ்ந்து வெடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஷெல் வீழ்ந்த சமயம் அங்கு 'மாஹோ' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டுக் கொண்டிருந்ததாகவும்—

ஆனால் பாதிப்பு இன்றி பொருள் இறக்கும் பணி தொடர்ந்து நடைபெற்றதாகவும்—

மேலும் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை—

பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து யாழ். நகருக்கு பொருள்களை ஏற்றிவரும் வாகனங்கள் தென்மராட்சி ஊடாகவே நேற்று வந்தன. (உ-3-173)

## உயிரிழந்தோர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரது மனைவி யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

★ செல்லத்துரை ஜதீஸ்வரன் (வயது 25)— பளையில் இருந்து இடம்பெயர்ந்து புத்தூரில் வசித்து வந்தவர். புத்தூர் கிழக்கில் உள்ள இவரது கடைக்கு மேல் விழுந்த ஷெல்லினால் படுகாயமுற்ற இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மரணமானார்.

★ முருகன் (வயது 21) அச்சுவேலி தோப்பு பகுதியைச் சேர்ந்தவர். இவர் ஷெல்வினால் இறந்து விட்டார் என்ற தகவலை அந்த ஷெல் தாக்குதல் சம்பவத்தின் போது இவருக்கு அருகில் நின்று காயமடைந்த இவரின் நண்பர் சிவவர்ணன் தெரிவித்தார். சிவவர்ணன் தற்போது சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

★ உயிரிழந்த மற்றொருவரின் பெயர், விபரம் இச்செய்தி அச்சுக்கு போகும் வரை கிடைக்கவில்லை. (உ-3-13-15-31)

## 50 ஆயிரம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுவில் கமலாசனி வித்தியாலயம் சாவகச்சேரி விக்கினேஸ்வரா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் உடனடியாக அகதி முகாம்கள் திறக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டுள்ளது.

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியிலும் அகதி முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இடம் பெயர்ந்தவர்களுக்கு உணவு மற்றும் இருப்பிட வசதிகளை வழங்கும் பணியில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் ஈடுபட்டுள்ளது. [உ-8)

## படையினரின் ஷெல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

னெச்சரிக்கையாக ஏற்கனவே வெளியேறியிருந்ததால் பெருமளவு உயிர்ச் சேதம் தவிர்க்கப்பட்டது.

எனினும் படையினரின் ஷெல்களினால் நூற்றுக்கணக்கில் வீடுகளும் பொது மக்களின் பெருமளவு சொத்துக்களும் நாசமாகின.

ஷெல்கள் விழுந்துவெடித்த பிரதேசத்தை அண்டிய பகுதிகளில் வசித்த மக்கள் — ஆயிரக்கணக்கில் இடம்பெயர்ந்த வண்ணம் இருந்தனர்.

[illegible] தாக்குதல் தொடர்ந்து [illegible] பட்டது.

(உ-8-11-13-15-31-173)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கண்மணியம்மாள் மயில்வாகனம்

சந்நிதமடத்தைச் சேர்ந்த அமரர் அப்பாசாமி மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவி திருமதி கண்மணியம்மாள் அவர்கள் சந்நிதமடத்தில் 01-10-95 அதிகாலை இயற்கை எய்தினார்.

அன்னார் திரு. கனகரத்தினம், திருமதி புவனேஸ்வரி அம்மாள் (ராசாத்தி) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரது இறுதிக் கிரியைகள் இன்று 02-10-1995 முற்பகல் 10-00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

தகவல்:
திரு. நா. சின்னத்துரை
(மருமகன்)

117, அரசடி வீதி,
சந்நிதமடம். [38791]

## திருமதி துரைராசா தங்கம்மா (பூமணி)

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் 1ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய தங்கம்மா (பூமணி) நேற்று 01 - 10 - 1995 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

இவர் காலஞ்சென்ற துரைராசாவின் (ஓவசியர்), மனைவியும், நாகலிங்கத்தின் மகளும் கமலாதேவி, காலஞ்சென்ற நடேசபிள்ளை, சிற்றங்கநாயகி, வசந்தநாயகி (அவுஸ்திரேலியா), ரபேஷன் ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். ஈமக்கிரியை பற்றிய விபரம் பின்பு அறிவிக்கப்படும்.

தகவல்:
சி. கமலாநந்தன்,
பேரன்

5, 1ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம். (சி-2391)

## செல்லப்பா பரமசாமி

யாழ்ப்பாணம் கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அன்டர்சன் தொடர்மாடி கொழும்பில் வசித்தவருமான செல்லப்பா பரமசாமி (புகையிரத இலாகா) 30-9-95 இல் இந்தியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற செல்லப்பா மீனாட்சியின் அருமைப் புதல்வரும், இளைப்பாறிய பூநகரி விதானையார் சபாரத்தினம் சொர்ணம் ஆகியோரின் மருமகனும், கமலராணியின் அன்புக் கணவரும், துவாரகா, கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும், செல்லம்மா, காலஞ்சென்ற மனோன்மணி, மற்றும் பொற்கொடி (லண்டன்), சுசிலாதேவி, அன்னலட்சுமி (லண்டன் ஆகியோரின் அருமைச் சகோதரரும், சந்திரகுமார் (இலங்கை வங்கி, சாவகச்சேரி), சிவகுமார் (லண்டன்), காலஞ்சென்ற இராசையா, மற்றும் பொன்னையா, நாராயணபிள்ளை (லண்டன்), கனகலிங்கம், இராமலிங்கம் (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இந்தியாவில் 30-9-95 அன்று நடைபெற்றன.

இன்று அவரது கல்வியங்காடு இல்லத்தில் துக்க நிகழ்வு இடம்பெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
வை. கனகலிங்கம்
(ஓய்வுபெற்ற P.W.D. ஓவசியர்)
(மைத்துனர்)

G.P.S. றோட், கல்வியங்காடு. [38800]

## திருமதி செல்லம்மா தம்பிராசா

(சண்டிலிப்பாய் வடக்கு)

ஆலங்குளாய் சண்டிலிப்பாயை பிறப்பிடமாகவும், மஞ்சத்தடி இணுவிலை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்டிருந்த திருமதி செல்லம்மா தம்பிராசா நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், V.T கந்தசாமி, மகேஸ்வரி, புஸ்பலீலாவதி, தியாகராசா, தர்மலிங்கம், விமலாதேவி, ஜோகராசா, ஜெயதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவசுப்பிரமணியம், வன்னியசிங்கம், சர்வேஸ்வரி, சந்திரவதனா, காராளசிங்கம், குகனேசமலர், புவனேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உறவினர்களும், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தர்மலிங்கம்
(மகன்)
(நில அளவை திணைக்களம்)

மஞ்சத்தடி,
இணுவில். [38799]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 02 - 10 - 95 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org